18

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

சிவயோக சுவாமிகள் அருளிச் செய்த

# நற்சிந்தனை

(செய்யுள், உரைத் திரட்டு)



யாழ்ப்பாணம்
கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்

யா. கூ. த. நா. ப. வி. கழகம் வெளியீடு, 18.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவயோக சுவாமிகள்
அருளிச் செய்த

# நற்சிந்தனை

(செய்யுள், உரைத் திரட்டு)

வெளியீடு

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு: 1973
விலை ரூபா: 1-50

சர்வதேச புத்தக ஆண்டு

International Book Year

***J. C. T. B. P. S. S. Publication No 18***

# NAT CHINTHANAI

*Selections from*

SIVA YOGA SWAMIGAL'S

*Sayings in*

***VERSE AND PROSE***

Published by

THE JAFFNA CO-OPERATIVE TAMIL BOOKS PUBLICATION AND SALES SOCIETY LTD.
(*Regd. No, J*/1538 *of* 10-11-67)

411/1, K K. S,. ROAD, JAFFNA.

*செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.*



## முன்னுரை

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.*

ஈழவள நாட்டிலே அண்மைக் காலத்திலே வாழ்ந்த மகான்களுள்ளே மிகச் சிறந்தவராக விளங்கியவர் சிவயோக சுவாமிகளேயாவர். சுவாமிகள் பல்லாயிரக் கணக்கான மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கி அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டினார்; தோன்றாத் துணையாகவிருந்து அடியவர் நலம் பேணி அருட்சித்துகள் பல செய்து, புத்திகள் பல போதித்துப் பத்தி வழியை விளக்கி, முத்திநெறி காட்டிய வித்தகச் சித்தராவர்.

இங்ஙனம் இருளை நீக்கி ஒளியைத் தந்த சிவயோக சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே செவ்வேள் உறையும் செழும்பதியாகிய மாவிட்டபுரத்திலே 1872ம் ஆண்டிலே வைகாசித் திங்களிலே அவிட்ட நட்சத்திரத்திலே வறுமையிற் செம்மையாய் வாழ்ந்து, அறுமுகவனடி மறவா அம்பலவாணரும் அமுதமும் செய்த தவப்பயனாய்ப் பிறந்தார். அவரது இளமைக்கால வாழ்க்கைபற்றியும் பிள்ளைத் திருநாமம் முதலியன பற்றியும் எதுவும் உறுதியாகக் கிடைக்கவில்லை.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் அரச சேவையிற் சேர்ந்து, மலேரியாக் காய்ச்சல் தாண்டவமாடிய கிளிநொச்சிப் பெருங்காட்டிலே இருந்த நீர்ப்பாசன அலுவலகத்தில் பொருட்காப்பாளராகக் கடமையேற்றார். இக்காலத்திலே, உத்தியோக வேலைகள் இல்லாத நேரத்தைத் தேவார திருவாசக திருவருட்பாக்களை ஓதுவதிலும், வடமொழிச் சுலோகங்கள் பயில்வதிலும் ஆத்மீக விடுதலையை விரும்பி யோக சாதனைகளில் ஈடுபடுவதிலும் கழித்து வந்தார்.

இக்காலத்திலேதான் ஒருநாள், நல்லூர்க் கந்தன் தரிசனத்துக்காகச் சென்றிருந்தபொழுது, அங்கே தேரடியிலுள்ள கூவிளத்தின் தண்ணிழலிலே செம்மை சேர் பொலிவோடு விளங்கிய செல்லப்ப சுவாமிகள் என்னும் திருப்பெயர் பூண்ட மாபெருந் தவத்தினரா கிய சிவஞானச் செல்வரைக் கண்டு அவர்பால் மனம் ஈர்க்கப்பட்டார். இந்தச் சந்திப்பைப்பற்றிப் பிற்காலத் தில் யோக சுவாமிகள் பல நற்சிந்தனைச் செய்யுள்களி லும், உரையாடல் உபதேசங்களிலும் மிகச் சுவையா கக் கூறியுள்ளார்கள்.

எம் சுவாமிகளின் வாழ்வில் அன்று ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. செல்லப்ப சுவாமிகளின் தரிசனத் தின்போது கிடைத்த உபதேச மணிகளான "ஆரடா நீ" "தேரடாவுள்" "தீரடாபற்று" "தேரடாபற்று" முதலி யன அவரது வாழ்க்கைப் போக்கைத் திருப்பிவிட்டன. அன்றே இனசனத் தொடர்புகள் தாமாகவே அறுந்து விட்டன. செல்லப்பாச் சுவாமிகளையே தம் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமாகக் கொண்டு அவர்களுக்கே தாம் மீளா அடிமையானார்கள். அக் குருதேவர் வாக்கே வேதவாக்காயிற்று.

சற்குரு தரிசனத்தையும் அதன் விளைவுகளையும் பற்றிச் சீடரே கூறியுள்ளார்.

"இருவரும் தேடிக்காணா இறைவன் என்போல் உருத்தாங்கி இறங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னான் இவனென்ன ஒருவருமறியா தேரடியுலாவி உவகை பூத்த முகத்தினராய் ஒருநாள் என்றனை உற்று நோக்கி ஓர் பொல்லாப்பு மில்லை யென்று அருவமுங் காட்டி, உருவமுங் காட்டி, அப்பாற் கப்பாலாம் அருள் நிலை காட்டிக் காட்டிக் காட்டி அந்தமாதி யில்லாச் சொரூபமுங் காட்டிச் சும்மாவிருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான்; துன்பம் இறந்தன; இன்பம் இறந்தன; சோதி சோதி சிவசோதி."

பலவாண்டுகள் குருவும் சீடரும் இணைபிரியாது வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்திலே குருநாதன் சீடரைப் பலவகைச் சோதனைகட்குள்ளாக்கிப் பதப்படுத்தினர். இவற்றின் விளைவாக நம் சுவாமிகளின் பாசங்கள் ஒழிந்தன. ஞானவொளி வீசத் தொடங்கியது. தொடங்கவே சிவாநந்தம் மேலிட்டது. குருவருள் பெற்றுக் குணமென்னும் குன்றேறி நின்றவர் சித்தி, பத்திகளைப் பெற்று விளங்கி *1964-3-23* திங்கட்கிழமை இரவு மகா சமாதியடைந்தார்கள்.

சிவயோகியாகியும், சிவஞானியாயும் சீவன்முத்தராயும் விளங்கிய சிவயோக சுவாமிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகச் செய்யவேண்டியவற்றை யெல்லாம் செய்து, போதிக்க வேண்டியவற்றையெல்லாம் போதித்து ஒரு குறையும் விடாமல், மக்கள் மத்தியில் நடமாடும் தெய்வமாக விளங்கி பல்லாயிரக்கணக்கானவர்களை வழி நடத்திய கருணை தான் என்னே!

காலத்துக்குக் காலம் பல அடியார்களுக்குக் கூறிய உபதேசங்களாகிய கவிதைகளையும் உரைகளையுங் கொண்டதே நற்சிந்தனை என்னும் நூலாகும். இந்த நற்சிந்தனையிலிருந்து சிலவற்றைத் திரட்டி வெளியிட்டால், மாணவர்கள் முதலாயினேரின் தனிப் பிரார்த்தனை கூட்டு பிரார்த்தனைகளின் போதும் ஏனைய பல சந்தர்ப்பங்களிலும் பயன்படும் என எண்ணி இச்சிறு நூலை வெளியிடுகின்றேம்.

சுவாமிகள் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி உய்தியடைவோமாக.

> ஒரு பொல்லாப்புமில்லை
> எப்பவோ முடிந்த காரியம்
> நாமறியோம்
> முழுதும் உண்மை

**14-1-73** யா. கூ. த. நா. ப. வி. கழகம்

## நான் யார்



நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்ருய்ப்பதியக் கடவது. ஆனல் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலே என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே - நானே

## குருநாதன் அருள் வாசம்

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை. நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே. நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்கமுடியாது.

நமக்கு ஒரு குறைவுமில்லே, நாம் என்று முள்ளோம் எங்கு மிருக்கிறேம். எல்லா மறிவோம். இப்படியே நாம் இடையருது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

"சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந்
தன்மை நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே"

என்னும் தாயுமானவர் அருமைத் திருவாக்கே இதற்குப் போதிய சான்று.

உ

சிவமயம்

## காப்பு

தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே.

## நூற்சிறப்பு

நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில் — விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்கு
என்றுமின்ப மென்றே யிசை.

அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே
ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே
தேவாதி தேவரும் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே
என்னை யாண்டதும் சிவமே.

உறுதி தருவது சிவமே
உள்ளத்துணர்வது சிவமே
பொறுதி தருவது சிவமே
பூரணமாவது சிவமே
இறுதி யில்லாதது சிவமே
என்னை யுடையது சிவமே
கருத வினியது சிவமே
காசினி யெல்லாம் சிவமே.

உ

சிவமயம்

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானு னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணு னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாத னெங்கள்குரு நாதன்
நான்தானுய் விளங்குகின்ரு னெங்கள்குரு நாதன்.1

தேகம்நீ யல்லவென்ரு னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்ரு னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்ரு னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்ரு னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்ரு னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்.2

வாசியோகந் தேரென்ரு னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்ரு னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்ரு னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்ரு னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்ரு னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்ரு னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்ரு னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்ரு னெங்கள்குரு நாதன். 3

இருவழியை அடையென்று னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென் று னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்று னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்று னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்று னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்று னெங்கள்குரு நாதன்
நிருமலனு யிருவென்று னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்று சொன்ன னெங்கள்குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்று னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்று னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்று னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்று னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்று னெங்கள்குரு நாதன்
நித்தியன் நீ யென்றுசொன்ன னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்று னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்று னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்று னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்று னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்று னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்று னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்று னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்று னெங்கள்குரு நாதன். 6

தித்திக்கு மொருமொழியா னெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்று னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணு னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனு னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7

ஆதியந்த மில்லையென்ற னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்ன னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்ற னெங்கள்குரு நாதன்
சாதிச மயமில்லா னெங்கள்குரு நாதன்
தானய் விளங்குகின்ற னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ண னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்ற னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நான்
பாங்காக ஏறென்ற னெங்கள்குரு நாதன்
தச்சன் கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்ற னெங்கள்குரு நாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்ற னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்ற னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்ற னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்ற னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்ற னெங்கள்குரு நாதன். 10

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

## அடைக்கலம் அடைக்கலம்

இராகம் - ஆரபி　　　　　　　　　　தாளம் - ஆதி

### பல்லவி

பாரையனே - கடைக்கண்ணுல் - பாரையனே

### சரணங்கள்

பாரைய னேமனம் பதையாம லடியேனைச்
சேரைய னேயுன் செழுங்கழற் கடைக்கலம். 1

ஆரைய னேதுணை அடியேற் குனையல்லால்
தீரைய னேமிடி திருவடிக் கடைக்கலம். 2

ஊருந் துணையில்லை உற்ருர் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம். 3

சீருந் துணையில்லை செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம். 4

சிந்தையி லன்பு பொருந்த அடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம். 5

எந்தையே எம்பெரு மானேயென் றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம். 6

கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும்பணி செல்வநிற் கடைக்கலம். 7

வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தாவுன் பொன்னடிக் கடியே னடைக்கலம். 8

தத்தாதித் தோம்திமி தாந்தோமென் றுடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம். 9

நெடியமா லயன்தேடிக் காணுமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம். 10

## நல்லைப் பதிக் கரசே

நல்லைப் பதிக்கரசே! நல்லைப் பதிக்கரசே!
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா. 1

கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா. 2

ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா. 3

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா. 4

சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா. 5

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா. 6

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா. 7

என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா. 8

---

## நானுமவனே நீயுமவனே

ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியுங் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே.

## கிழமை வணக்கம்

தாயினு மன்பு தழைத்த குருவே தயாபரனே
தீயினு மிக்க திருமேனி யும்நின் திருவடியும்
நாயினு மிக்க கடையேனை ஆள் நலமுடனே
ஞாயிறு தோறும் வருவாய்நல் லூரில்வாழ் நாயகமே 1

அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும்
அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கய னைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் தேசிகனே 2

ஒவ்வா தெனச்சொல்லி ஊரூர்கள் தோறும் உலைந்தலையும்
இவ்வீணற் காக்க இனிவரு வாய்இள வேல்முருகா
தெய்வானை வள்ளி தினமும் அணிசெய்யும் சேவகனே
செவ்வாய்க் கிழமை வருவாய்நல் லூரினிற் றேசிகனே 3

பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேஎழில் சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில்வாழ்
புண்ணயனே 4

தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர்
தமக்குவரும்
வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே
தியான நிலையி லுனைக்கண்டு தேறித் தெளிவதற்கு
வியாழக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே 5

புள்ளிக் கலாப மயிலேறுஞ் வேலவ புண்ணியனே
தெள்ளித் தெளிந்தவர் சித்தத்தி லூறும் தெளியமுதே
வள்ளிக் குகந்தவ னேமுரு காமற வாமலனை
வெள்ளிக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே 6

இனியே தெனக்குன் னருள்வரு மோவென வேங்கிமனம்
தனியே யிருந்து வருந்து தையோசத்தி வேல்முருகா
கனியே கனியி ரசமே அடியனேன் கண்களிக்கச்
சனிவாரம் தன்னில் வருவாய்நல் லூரில்வாழ்
சண்முகனே 7

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே !
இரவுபகல் காணேனெடி. 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே !
நல்லூரான் தஞ்சமெடி. 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே !
கவலையெல்லாம் போகுமெடி. 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கத்தன் திருவடிகள் - கிளியே !
காவல் அறிந்திடெடி. 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே !
ஆறுமுகன் தஞ்சமெடி. 5

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியில் சொன்னனெடி - கிளியே !
பொல்லாங்கு தீருமெடி. 6

## ஒரு பொல்லாப்புமில்லை
### (தெம்மாங்கு மெட்டு)

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் உண்மை
முழுது மென்பான்
ஒருவருக்குந் தெரியாதென்பான் - சின்னத்தங்கம்
ஓவியம்போல் இருந்தானடி. 1

அப்படியே உள்ளதென்பான் ஆரறிவா ரென்று
சொல்வான்
செப்படி வித்தையென்பான் - சின்னத்தங்கம்
செல்லப்பன் என்னுஞ்சீமான். 2

கந்தைத் துணியணிவான் கந்தன்திரு முன்றில்நிற்பான்
வந்தாரைப்போ வாரைவாயில் - சின்னத்தங்கம்
வந்தபடி ஏசிடுவான். 3

அப்படியே உள்ளதென்பான் அங்குமிங்கு மாயலைவான்
செப்படி வித்தையென்பான் - சின்னத்தங்கம்
தேரடியில் இருப்பானடி. 4

சாதி சமயமென்னுஞ் சங்கடத்துக் குள்ளாகான்
சேதியொன்றுஞ் சொல்லகில்லான் - சின்னத்தங்கம்
சித்தப் பிரமையென்பார் (எல்லோரும்). 5

நீதி அநீதிஎன்னும் நிலைமையொன்றும் இல்லாதான்
மாதிரிகள் ஒன்றுஞ்செய்யான் - சின்னத்தங்கம்
மத்தனைப்போல் திரிவானடி. 6

நீறு மணியான் நெற்றியிலே பொட்டுமிடான்
கூறிய தைக்கூறுன் - சின்னத்தங்கம்
குணமொன்று மில்லானடி. 7

ஆறுதலா யிருமென்னுன் ஆணவத்தை நீக்குமென்னுன்
மாறுபாடாய்ப் பேசிடுவான் - சின்னத்தங்கம்
மதியிழந்தான் என்பாரடி. 8

சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை
என்னப்பன் பேசிடுவான் - சின்னத்தங்கம்
இவன்விசரன் என்பாரடி. 9

உல்லாச நடையனடி ஊரூராய்த் திரிவனடி
எல்லோரு மிவனைக்கண்டு - சின்னத்தங்கம்
ஏளனஞ் செய்வாரடி. 10

பத்துப்பாட்டுப் படிப்போரும் கேட்போரும் பாரினிலே
வித்தகராய் வாழ்ந்துபின்னே - சின்னத்தங்கம்
விதேகமுத்தி சேர்வாரடி. 11

---

## உறுதி மொழியிதனை அறிவீரே

சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மவுனமா யிருந்திளைப் பாறீர்
மந்திர மிதுவெனக் குறியீர். 1

அவனிவ ஞெரென அறியீரோ
ஆன்மா நித்தியம் தெரியீரோ
உவமை கடந்தவின்பம் உள்ளீரோ
உண்மை முழுதுமெனக் கொள்ளீரோ. 2

ஐம்பொறி வழியினிற் செல்லாதீர்
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே. 3

ஒருபொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம்சிவாய நமவெனத் தொழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே. 4

## திருவருட் செய லெப்படியோ

**இராகம் - காப்பி** **தாளம் - சதுர்ச ஜாதி ஏகம்**

**பல்லவி**

திருவருட் செய லெப்படியோ
சீமானே கோமானே

**அநுபல்லவி**

திருவளர் நல்லூர் மேவிய
ம்தவே செல்லப்பா (திரு)

**சரணம்**

வரவர மனத்திற் கவலைகள் மிஞ்சி
வலிந்துகவரும் மாய வாழ்வினுக் கஞ்சி
அரகரசிவனே சங்கராவென்று
போற்றினேன் புகழ் சாற்றினேன் (திரு)

இரவும் பகலு மிணையடி மறவேன்
இனியடியேன் மண்ணிற் பிறவேன்
பரவும் யோக சுவாமிகட் கன்பு
காட்டுமோ வொளி சூட்டுமோ (திரு)

---

## ஈசனே நல்லூர் வாசனே

**இராகம் - கமாஸ்** **தாளம் - ஆதி**

**பல்லவி**

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா.

**சரணம்**

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்வண்ணம்
வாவா. (ஈசனே)

தாசனை யோகசுவாமி சாற்றும் பாவை
கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா. (ஈசனே)

## வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம் - கரஹரப்பிரியா    தாளம் - ரூபகம்

பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ - விளங்கு
கௌரி பாலகா - வா

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா - காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா (வீர)

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா (வீர)

---

## சொல்லச் சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்

சொல்லச்சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்
அல்லும் பகலும்அற்ற ஆனந்தம் தருமோனம்
வெல்லவரும் மாந்தர்தம் வாயடக்கும் சிவஞானம்
கொல்லவரும் யமனும் குடிஓடிப் போய்விடுவான்
கல்லை யுருக்கிவிடும் கருணைவெள்ளம் பெருகிவிடும்
இல்லையென்னும் சொல்லை இல்லாமல் ஆக்கிவிடும். 1

நல்லூரில் தேரடியில் நாம்கண்ட சிவயோகம்
சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டிவிடும்
வில்லை விடத்தையஞ்சா வீரசாந்தம் ஊட்டிவிடும்
பல்லைக்காட்டித் திரியாமல் பரலோகம் கூட்டிவிடும்
பத்துப்பாட்டுப் படிப்பவரும் கேட்டுச் சுவைப்பவரும்
வித்தக ராகவாழ்ந்து விதேகமுத்தி சேர்வாரே. 2

## நல்ல மலர்

### வெண்பா

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் — நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி. 1

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் — ஒழிவின்று
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது. 2

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றுள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் — பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா! வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம். 3

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை — சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர். 4

தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை — நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம். 5

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர் — நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார். 6

பாராயோ வென்னைநீ பார்த்துக் கவலையெல்லாந்
தீராயோ செய்ய திருவேலா — வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு. 7

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும!
மறக்குறத்தி வள்ளி மணாள! — நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ. 8

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும் — நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று. 9

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக் — குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான் 10

---

## கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வம்

**இராகம் - எதுகுலகாம்போதி** **தாளம் - மிஸ்ரம்**

**பல்லவி**

கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வமே
கடைக்கண் பார்நீ தெய்வமே.

**அநுபல்லவி**

ஒருத்தர் துணையுமில்லை உன்றுணை யல்லாமல்
உலகுயிர் பரமாகி நடிக்கின்ற செல்வமே (கருத்தில்)

**சரணம்**

எங்கெங்கு சென்றாலும் அங்கெங்கும் நீயே
ஈசா மதுராபுரி வாசா மீனாட்சி
நேசனே சொக்கநாதா யோகனுக்கருள் தாதா
நின்றும் இருந்துமுனை யென்றென்றும் போற்றநான்
(கருத்தில்)

## எக்காலம்

அல்லும் பகலும் அப்பன் திருவடியைச்
சொல்லாமற் சொல்லிச் சுகம்பெறுவ தெக்காலம் 1

நில்லா வுலகையும் நிலையென எண்ணிமனஞ்
செல்லாமல் திருவடியைச் சிந்திப்ப தெக்காலம் 2

காண்பான் காட்சியும் காட்சிப் பொருளுமற்றுத்
தூண்போ லிருந்து சுகம்பெறுவ தெக்காலம் 3

பொன்னாசை மண்ணாசை பெண்ணாசையைநீக்கிப்
பொன்னார் திருவடியைப் போற்றுவது மெக்காலம் 4

வேதாந்தம் பேசி வீண்காலம் போக்காமல்
நாதாந்த மோனநிலை நண்ணுவது மெக்காலம் 5

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்தவனைத்
தெள்ளுதமிழ் பாடிச் சேவிப்ப தெக்காலம். 6

ஆறாறு தத்துவத்துக் கப்பாலாய் இப்பாலாய்
வேறாய் உடனாய் நினைப்பதுவு மெக்கலாம் 7

நினைவுக்கு நினைவாய் நிலைத்திருக்கும் மெய்ப்பொருளை
அனைத்துக்குங் காரணனை அறிவதுவு மெக்காலம் 8

மூனைத்துவரும் மூர்க்கக் குணமெல்லாம் நீக்கித்
தினைத்தனையும் மறவாமல் சேவிப்ப தெக்காலம். 9

பத்தும் படிப்போர்கள் கேட்போர்க ளெல்லாரும்
வித்தகன்றன் திருவடியை விரவிநிற்பர் நிச்சயமே. 10

## தாலாட்டு

அன்னைபிதாக் குருவாகி அடியேனை ஆட்கொண்ட
தன்னிகரில் லாதசற் குருவேநீ கண்வளராய். 1

என்னையினிப் பிறவாமல் ஈடேற்றி வைத்தவனே
உண்மை முழுதுமென்ற உத்தமனே கண்வளராய். 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனே
சேமமுட னென்னகத்தில் சீமானே கண்வளராய். 3

அப்படியே உள்ளதென அடிக்கடியே செல்லியென்னை
இப்படியில் வாழவைத்த எந்தையே கண்வளராய். 4

காணுங் கண்ணிற் கலந்தவனே கார்வண்ணா
நானும்நீயு மென்றுரைக்க நாணுவேன் கண்வளராய். 5

சீராரும் நல்லூரில் தேரடியி லேயிருந்து
ஆரறிவா ரென்றுசொன்ன அப்பனே கண்வளராய்.

எப்பவோ முடிந்ததென எனக்குப தேசம்செய்த
ஒப்பிலா மாமணியே உறவோனே கண்வளராய். 7

ஒருபிடி சோற்றுக்காய் ஊரூராய் நானலையத்
திருவருள் தந்தவனே செல்லப்பனே கண்வளராய். 8

எட்டாத கொப்பில் இருக்குமுனை யாரறிவார்
மட்டில்லா மாமணியே மாதவனே கண்வளராய். 9

கண்ணே உறங்குறங்கு கார்வண்ணா நீயுறங்கு
எண்ணோன் பிறதெய்வம்என் னிதயத்தே நீயுறங்கு. 10

## அவனே நான்

இராகம் - பைரவி                                                  தாளம் - ஆதி

### பல்லவி

அவனே நா னென்று சொல்லித் தியானஞ்செய்
வாய்தினமும்
ஆசையெல் லாமொழியும் ஈசன் அருள் பொழியும்

### அநுபல்லவி

அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாமலே செபி
(அவனே)

### சரணம்

கொஞ்சங் கொஞ்சமாய் மனத்தை
கூடுமட் டுமடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீதொடக்கு
கோபம் பொறுமை தள்ளு கொலை களவை எள்ளு
கூடிப் பாடி ஆடு சிவனடி யாரோடு (அவனே)

ஆதியோ டந்தமில் லாதஆன் மாவென்று
அடிக்கடி நீபடி துடிதுடிப் பாய்நடி
அயலுனக் கில்லை ஆரறி வார்நல்லை
ஆசான் சொன்ன மொழி முழுவது முண்மை (அவனே)

பலபல வானசித்தி பாரினிற் கைகூடும்
பத்திநெறி விட்டிடாதே பத்தர்சொல்லைத் தட்டிடாதே
பைரவி ராகம்பாடிப் பணிசெய்யும் யோகசுவாமி
பாவமெல் லாமோடப் பாரினில் ஈடேற (அவனே)

## மறப்பேனே குருநாதன் தன்னை

இல்லையென் ளுமல் இரப்போர்க்கொன் றீவரேல்
தொல்லைவினை யெல்லாம் தொலைந்துபோம் - நல்லைக்
குருநாதன் கூறினன் பொல்லாப்பிங் கில்லை
உருகாதோ நெஞ்சம் உவந்து. 1

உண்மை முழுதுமென ஓதுங் குருநாதன்
தன்னை மறப்பேனே தாரணியில் - பின்னையினித்
துஞ்சல் பிறப்புண்டோ சோர்வச்சம் தாமுண்டோ
கஞ்சமலர்த் தாளென்றும் காப்பு. 2

காக்குந் திருவடிகள் எந்நாளும் என்மனத்தில்
பூக்கும் பொறிவழியே போகாமல் - நோக்குமென்றும்
தேக்கும் சிவானந்தத் தேனமுதை யுண்டுமனம்
நீக்கமின்றி நிற்கும் நினை. 3

நினைக்கு மடியாரை நீயேநா னென்றே
அணைக்குந் திருக்கரந்தா னன்னே - கணைக்கும்
கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ்நல் லூரான்
தொடுக்கும் வல்வேலைத் துதி. 4

துதிக்க மதிதந்த தூயோன்றன் பாதம்
துதிக்க வினைகள் துகளாம் - மதிக்கருளும்
ஐயன் திருமதலை ஆறுமுகன் வீதியிலே
தெய்வமென நின்றான் தெளி. 5

---

### பரவ வரமருள்

மரகத மயின்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முகனே
அரவணி சிவனு ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா.

## நூதன மொன்றுமில்லை

### ஆசிரிய விருத்தம்

ஆவதோ ஒன்றும் இல்லை அழிவதோ ஒன்றுமில்லை
நோவதேன் பிறர்தம் மாட்டு நூதனம் ஒன்று மில்லை
தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய்த் தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலு வாயே. 1

புகல்வதற் கொன்று மில்லை புண்ணிய பாவ மில்லை
இகல்செயும் மனத்தை வென்றே யீசனை
வேண்டி நின்றால்
நிகருனக் கியாரு மில்லை நீயிதை யறிந்து மண்ணில்
இகலுடன் வாழு வாயே இதுதிட மறிகு வாயே. 2

அறிகுதி யறிவி னாலே யறிகுதி தன்னை யென்றான்
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
குறிகுண மொன்றும் இன்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்க ளென்று செப்புதற் கொன்று மின்றே. 3

இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடமே யில்லை
அன்றுசெய் வினையி னாலே அவனியிற் பிறந்தோ மென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே. 4

வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக் கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை
முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று
வாழ்வீர். 5

---

செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்
பொல்லாப் பிலையென்றான் போற்று.

முழுதுமுண்மை என்று முனிவனவன் சொன்னான்
எழுத முடியா திதை.

## தன்னைத் தன்னு லறிந்திடடா

அன்பேசிவம் அறிந்திடடா
அதுவே நாமெனத் தெரிந்திடடா
என்புருகப் பாடிடடா
எழுந்திரடா நடந்துவாடா
எல்லாம்சிவ ரூபமடா. 1

விண்ணைப்போல விளங்கிடடா
வீணுசையை விட்டிடடா
கண்ணைப்போலக் காத்திடடா
கருமத்தைச் செய்திடடா
கலங்காமல் நடந்திடடா
இலங்கையெங்கள் நாடிதடா. 2

பெண்ணுமாணும் இல்லையடா
பேதாபேதம் இல்லையடா
மண்ணும் விண்ணுமொன் ருச்சுதடா
மகத்துக்களின் பேச்சிதடா
மகிழ்ந்துவாடா நடந்துவாடா
மாநிலத்தை ஆள்வோமடா. 3

தன்னைத்தன்னு லறிந்திடடா
தானேதானென் றிருந்திடடா
அன்னைபோல வந்தானடா
அழகாரும்நல் லூரிலடா
பின்னைப்பேச் சில்லையடா
பெருமைசிறுமை தொல்லையடா 4

---

நாமறியோம் என்னும் நறிய திருவாக்குச்
சேமமுறச் சொன்னுன் தெரி.
முழுந்த முடிபென்று முன்னுளிற் சொன்னுன்
அடியார் முன்னர் அவன்.

## இன்பமாய் வாழ்ந்திடடி

அங்கிங்கென் றெண்ணதே அவனிவனென் றெண்ணதே
எங்குஞ் சிவத்தைக்கண்டு - தங்கமே இன்பமாய்
வாழ்ந்திடடி. 1

ஆசை வலையிற்சிக்கி - ஆண்டவனை நீமறந்தாய்
பூசைசெய்து பொன்னடியைத் - தங்கமே பூரணமாய்
வாழ்ந்திடடி. 2

இல்லையென்றும் உண்டென்றும் எடுத்துச்சொல்ல
வொண்ணுத
நல்லூரான் திருவடியை - தங்கமே நாடோறும்
போய்வணங்கு. 3

ஈடேற வேண்டுமென்றால் எல்லாம் சிவன்செயலாய்
நாடோறும் வேண்டிப்பணி - தங்கமே நல்லூரான்
கிருபையுண்டு. 4

உண்மை முழுதுமென்ற உயர்ந்த திருவாக்கை
எண்ணமல் எண்ணிப்பணி - தங்கமே எல்லாங்
கைகூடுமடி. 5

ஊரும்பேரு மில்லாத உத்தமனைச் சித்தத்தில்
சேரும் வண்ணம் நாள்தோறும் - தங்கமே தியானம்
செய்து வாழ்வமே. 6

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கு மீசனென்று
சொன்ன திருவாக்கே - தங்கமே சுந்தரமென்
றெண்ணியிரு. 7

ஏழுலகும் தொழுதேத்தும் எம்பெருமான் திருவடியை
நாளும் மறவாதே - தங்கமே நானுமில்லை நீயுமில்லை. 8

ஐம்பூதம் நீயல்லை அறிந்திதனைக் கொள்ளுவாய்
ஆன்மாநீ மறந்திடாதே - தங்கமே ஆட்சி செய்ய
வேண்டாமடி. 9

ஒன்பது வாயிலுள்ள உடம்பு சிவன்கோயில்
என்பதை மறந்திடாதே - தங்கமே ஏத்தியேத்திப்
பணிந்திடடி. 10

ஓதுவதொ ழியேலென்ற உண்மையைநீ மறவாதே
ஏதுக்கு மஞ்சாதே - தங்கமே எல்லாஞ் சிவமயமே. 11

ஔவியம் பேசாதே ஆவியுள்ள மட்டும்நீ
தெய்வம் ஒருவனென்று - தங்கமே திடமுடன்
வாழ்ந்திடடி. 12

அஃகமும் காசுந்தேடி அம்புவியில் அலையாதே
வெஃகாதே பிறன்பொருளைத் - தங்கமே வீடுனக்குச்
சொந்தமடி. 13

---

## ஐயனே சற்குருநாதா

**இராகம் - சஹானா** **தாளம் - ஆதி**

**பல்லவி**

ஐயனே சற்குரு நாதா - உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா - உனைத்
தோத்திரஞ் செய்தேன் பொற்பாதா (ஐய)

**சரணம்**

ஈயாத புல்லரைக் கூடி - நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி - நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி (ஐய)

ஆதார மாறையுந் தாண்டி - அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி - நானும்
தொடர்ந்துவந் தேனினை தாண்டி (ஐய)

## நல்லைப் பதிக் கரசே

நல்லைப் பதிக்கரசே ! நல்லைப் பதிக்கரசே !
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா. 1

கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா. 2

ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா. 3

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா. 4

சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா. 5

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா. 6

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா. 7

என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா. 8

---

## மலர்

மரத்திலே மலராத மலர்
வாசவனும் வைத்து வளர்த்தமலர்
சிரத்திலே எப்போதுஞ் சேரும்மலர்
தீயமணம் வாராமல் காக்கும்மலர்
கரத்திலே நாமெடுத்துக் காணும்மலர்
கதிக்குவழி யிதுவென்னக் காட்டும்மலர்
வரமென்னுங் கொடியிலே பூத்தமலர்
வாணாளெல்லாம் வாடாத மாமலரே.

## உன் நினைவல்லால் இல்லை

இராகம் - காபி  தாளம் - ஆதி

('ஜெகதோ காரணு' மெட்டு)

### பல்லவி

உன்நினை வல்லால் இல்லை
உயிர்த்துணை வோனே - உம்பர் கோனே

### அநுபல்லவி

அன்னைபிதாக் குருநீயே
அண்டினேன் வன்மமேனோ-வினைதானோ(உன்நினை)

### சரணம்

பொன்னம் பலவாணனே
புலவர்தம் பெருமானே
கன்னலே கட்டித்தேனே
கனிரசமே எம்மானே (உன்நினை) 1

என்னகச் சோதியே
இனியுன் பணிகதியே
இன்பசா கரமோன
மெனும்வடிவே என்கோனே (உன்நினை) 2

புன்னெறி செல்லும்பொல்லாப்
புந்தியை வென்றுமேலாம்
நன்னெறி செல்லவைத்து
நமக்கருள்தா எங்கோனே (உன்நினை) 3

உரையற்ற ஊமர்போலாய்
உள்ளமு வந்துமேலாம்
தரைதனில் யோகசுவாமி
தான்கடைத் தேற, ஈடேற (உன்நினை) 4

## வரந் தருவார்

வருவார்வ ருவார்வரம் தருவார் சுவாமி
வஞ்சம்பொ றாமைகோபம் நெஞ்சினில் நீவையாதே
(வரு) 1

ஒருவரும் இருவரும் மூவரும் ஆனவர்
ஓங்காரத் துட்பொருள் ஆகியே நிற்பவர் (வரு) 2

கருமத்தைச் செய்பலன் கருதாமல் உலகத்தில்
காயமே கோயிலாய்க் கண்டு வணக்கம்செய் (வரு) 3

தருமநெறி பிசகாமல் தாரணி தனில்வாழ்
தன்னைத்தன் னுலறியத் தியானத்தில் நீமூழ்கு (வரு) 4

மரும மறிந்தவர்கள் மண்ணிற்பிற வாரென்ற
மகத்துக்கள் வாக்கியத்தை மறவாமல் நினைத்துக்கொள்
(வரு) 5

திருவாரும் நல்லூரில் செல்லப்பன் மாணுக்கன்

திருவாளன் சொன்னசொல்லைச் சிந்திக்கச்
சீவன்முக்தி (வரு) 6

---

## அன்பில்லேன்

('முத்தி நெறி' மெட்டு)

அன்பில்லேன் பொறுமையில்லேன் அடியார்தம்
உறவுமில்லேன்
என்புருகப் பாடுகில்லேன் என்னையுமோர் பொருட்
படுத்தி
மண்ணுலகில் மானிடனாய் மறைந்துவந்து வழிகாட்டி
இன்னல்தவிர்த் தாண்டுகொண்டான் எழிலாரு
மிலங்கையிலே.

குணமில்லா மூர்க்கரொடுங் கூடியே திரிகின்ற
மணமில்லா முருக்கமலர் அனையேனை மகிழ்ந்துவந்து
தினையளவு போதினிலே சிவமாக்கி யாண்டுகொண்ட
இணையில்லா இறையவனை இலங்கைநகர் கண்டேனே. 2

என்னையெனக் கென்னுலே அறிவித்த வெம்பெருமான்
அன்னையினும் மிகவினிய வுருயிருக் குறுதுணைவன்
பொன்னைநிகர் மேனியான் பூங்கமலத் திருத்தாளான்
தென்னைபனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே. 3

நஞ்சைவென்ற கண்டத்தான் நால்வேதம் நவில்வாயான்
பஞ்சைவென்ற மெல்லடியாள் பாவையுமை பாகத்தான்
அஞ்சைவென்ற வடியார்கள் அகங்கோயில்
கொண்டபிரான்
மஞ்சைவென்ற மலைபொலியும் இலங்கைநகர்
கண்டேனே. 4

ஆவதொன்று மறிகில்லேன் அந்திசந்தி தொழுகில்லேன்
சாவதையுங் கருதுகிலேன் சஞ்சலமே மிகவுள்ளேன்
போவதுவும் வருவதுவும் இல்லாத புண்ணியனே
தேவர் குழு (உத்) தொழுதேத்தும் சீரிலங்கை
கண்டேனே. 5

இடுவதுவோ சிறிதுமிலேன் எவர்மாட்டு மன்புமிலேன்
சுடுவதுபோற் சொல்லவல்லேன் தாயோரைப்
பணிகில்லேன்
கெடுவதுவோ மிகவுள்ளேன் கேவலமாய்க் கிடக்
கின்றேன்
நடுவிகவா நாயகனே நம்மையாள் வதுகடனே. 6

## நடந்து போவோம்

இராகம் - பைரவி | தாளம் - ரூபகம்

### பல்லவி

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

### அநுபல்லவி

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்று போம் நீ வா. (நல்லை)

கல்லொத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா. (நல்லை)

நில்லன் பொடுநினைந்து நினைந்து
நீ நான் அறநின்று மகிழ்ந்து (நல்லை)

### சரணம்

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம் பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்
தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நித்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ் (நல்லை)

---

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அருண்மழை பொழிந்தது
ஆசான் அருளால் ஆனந்தம் விளைந்தது
ஆசான் அருளால் ஆசான் ஆயினேன்.

## நல்லூர் முருகன்

இராகம் - தோடி தாளம் - ஆதி

### பல்லவி

நல்லையில் வாசா ஞானப்பிரகாசா

### அநுபல்லவி

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டி தாபரா (நல்லை)

### சரணம்

நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேன் உந்து வேங்கையாய் தினைப்புனம் நின்றணை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா (நல்லை)

---

## முருகா நீ வா

முருகா நீவா முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும் முழு
வல்லவனே

உருகா மனமேன் தந்தாய் - திருமால் மருகா
உவந்துவந்து சிவந்ததாளிணை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)

அறுமா முகனே யரனார் மகனே
குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)

## நல்லூரைக் கும்பிடு

**இராகம் - ஜோகினி** **தாளம் - ஆதி**

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு — அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

**அநுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்தநாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு (நல்லூ)

**சரணம்**

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் — குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் — செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்ட இடம் கலங்கிநீ திரியாதே. (நல்லூ)

---

## ஆளவேண்டுமே

**இராகம் - சங்கராபரணம்** **தாளம் - திரிபுடை**

**பல்லவி**

சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குருநாதா
தமியேனை யாள வேண்டும். (சஞ்சல)

**அநுபல்லவி**

வஞ்சம் பொறாமை கோபம் வரவர நெருக்குதே
வாழ் நாளினுசை மிகமிகப் பெருக்குதே. (சஞ்சல)

**சரணம்**

எப்படிச் சொன்னாலும் நீ ஏனென்று கேளாமல்
செப்படி வித்தை செய்தல் திருவருட் காகுமோ
ஒப்புவமை யில்லாத அப்பனே செல்லப்பனே
உன்றுணை யல்லாமல் ஒருவரு மில்லை ஐயா. (சஞ்சல)

## உன்னடிமை நான் ஐயனே

இராகம் - கானடா　　　　தாளம் - திஸ்ரம்

பல்லவி

உன்னடிமை நான் ஐயனே
உளமகிழ்ந்து பார் மெய்யனே

சரணம்

பொன்னடி மாதவர் சேர்பெரு முத்தனே
பூங்கொடியாள் பங்கா
உன்னடி என்முடி வைத்தினி யாளுவாய்
ஓங்காரத்துட் பொருளே (உன்)

ஓயாமல் பொய்பேசி உழைக்கின்ற உலுத்தரை
உறவென்றிருந்து விட்டேன்
வாயார வாழ்த்தி வணங்கு மடியாரை
மனசாரப் போற்ற வைப்போய் (உன்(

சித்தத்துட் டித்திக்குந்தேனே பாலென்று
சிந்தனை செய்தடியேன்
இனியுத் தமரோடு பிரியாமல் வாழ
உன்னருள் தாருமையா (உன்)

நீயே நானென்று நினைக்கும்மெய் யடியாரை
நேயத்தொடு வணங்கிடுவார்
தாயே யனைய சங்கரனே வந்து
தண்ணருள் தாருமையா (உன்)

---

சிவதொண்டு செய்வார் தீநெறிச் செல்லார்
சிவதொண்டு செய்வார் புலனைந்தும் வெல்வார்
சிவதொண்டு செய்வார் பிறன்பொருள் வெஃகார்
சிவதொண்டு செய்வார் சிவமே யாவர்.

## மங்களம் ஜெய மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம். 1

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்கும் சிவனுர்க்கு மங்களம். 2

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப்பூசை பண்ணுவோர்க்கு மங்களம் 3

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம். 4

நாமறியோ மென்றுசொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற உத்தமர்க்கு மங்களம். 5

தன்னைத் தன்னாலறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம். 6

மண்ணைப் பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணைநகர் வாழும்வைத் தீசனுக்கு மங்களம். 7

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுக்கும் சங்கரற்கும் மங்களம். 8

விண்ணில் விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணி லடங்காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம். 9

நித்தியகர்மம் தவருத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்கும் கேட்போர்க்கும்
மங்களம். 10

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்.

## நல்லூர் வீதியில்

**இராகம் - பிலஹரி** **தாளம் - ரூபகம்**

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினுல்
இடர்கள் எல்லாம் போமே.

**அநுபல்லவி**

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

**சரணம்**

வேதாந்த சித்தாந்தம் கற்றதனுலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினுலென்ன
வீதியில் வந்தொருக்கால் வழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே. (எந்நாளும்)

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச்சயமே (எந்நாளும்)

---

பொழில்வாழும் பூங்குயிலே பொன்னெடுமா
மணிமுத்தும்
ஒழியாமல் கரைசேர்க்கும் ஓங்குகடல் சூழிலங்கை
அளியாளன் எனையாளும் ஆண்டவன்தன் திருநாமம்
தெளிவாக நீயெனக்குத் தீங்குரலால் கூவாயே.

## சற்குரு தரிசனம்

இராகம் - சாமா | தாளம் - ஆதி

### பல்லவி

சற்குரு தரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

### அநுபல்லவி

தாம் தன்னை அறியுமே
சாந்தமுஞ் செறியுமே

### சரணம்

பேரன்பு பெருகிவிடும் பேதைமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும் (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும் (சற்குரு)

தேவாதி தேவர்களும் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னும் தெளிவுமுன் டாகுமே. (சற்குரு)

---

## உய்ய வழி காட்டுவாய்

தெய்வமே யானெனதெ னுஞ்செருக் கால்மனது
    தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
    திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
    யுலகத்தில் எவரு முண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
    மயிலேறு தம்பிரானே.

## சிவனடியார்

நாங்கள் சிவனடியார்.

ஆதியுமந்தமும் இறப்பும் பிறப்பும் இரவும் பகலும் சுகமும் துக்கமும் எங்களுக்கில்லை யென்னும் திருமந்திரத்தை எவனொருவன் மறவாமல் தியானஞ் செய்கிறானோ அவனுக்கு ஒரு குறையும் வராது.

எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீ யாவாய்.

இதற்கெல்லாம் விடாமுயற்சி. அதாவது சலியாமை வேண்டும்.

பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமுமுண்டாகாது; பாடின்றிப் பட்டங் கிடையா தென்பது உலக வழக்கம்.

காரியசித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்ட காரியங்களைச் சிந்திக்கிறாய்? அச்சிந்தனையை விட்டு முழுமனத்தோடு தெய்வத்தை வணங்கு. உனக்கு விதிவசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து. இறுதியில் யாவும் ஜெயமாகும்.

அது அப்படியுள்ள காரியம் என்பதைச் சதா நெஞ்சிற் பதித்துக் கொண்டு இயல்பாய் உனக்கு வரும் வேலைகளையும் கடமைகளையும் செய்து கொண்டிரு. — அல்லது அவற்றை விட்டிரு. எதுவுஞ் சரியே.

செய்தலிலும் செய்யாமையிலும் அது தங்கியிருக்கவில்லை. கருமம் இல்லாமையை விரும்பாதே. கருமத்தைப் பற்றாதே. செய்தல், செய்யாமை இவற்றுள் இயல்பாய் எது உனக்கு அமைகின்றதோ அதையே பற்றி நில்.

---

## உபதேசம்

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன: கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகிவந்தால், மன உறுதி உண்டாகும். அஃதாவது, மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.

எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன; எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன; எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறைவுமில்லை; என்னிடத்திலே எல்லோரும் அன்பராய் இருக்கிறார்கள் நானும் எல்லாரிடத்திலும் அன்பாய் இருக்கிறேனென்று, அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்க வேண்டும். இப்படியே இடைவிடாமற் பழகி வந்தால், எல்லாமறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும் எளிதிற் கைவரும்.

ஓம் தத் சத் ஓம்

## சிவதொண்டு

### I

நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும், அசுரர்களும், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல், அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்த படியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்.

ஓம் தத் சத் ஓம்

## II

நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார். இது சரியை; இது கிரியை; இது யோகம்; இது ஞானம்; இது மந்திரம்; இது தந்திரம்; இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிலைத்தலே நிஷ்டை; இந்த நிஷ்டையுடையோர்க்குச் சீலமில்லை; தவமில்லை; விரதமில்லை; ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பிய வண்ணம் மண்ணில் வாழ்ந்தார்கள்; வாழுகிறார்கள்; வாழ்வார்கள். இவர் பெருமை யாவருமறியார்; கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்.

ஒரு பொல்லாப்பு மில்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம்.
முழுதும் உண்மை.

---

### முழுதும் உண்மை

உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் எல்லாம் தேவ சந்நிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு

பெரும் சத்தியம். யாவும் இருந்தபடியே நடந்து வருகின்றது. கிலேசமோ, அன்போ, பகையோ, இவை யாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே. நாமும் அப்படியே. பிறப்பைப்போல இறப்பு. புகழைப் போல இகழ். நன்மையைப் போலத் தீமை. முழுதும் உண்மை. முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும் இயங்காமல் இயங்கும். முடிவைக் காணேம். அதுதான்,

சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய் கொல்லை.

---

## தவம்

தவத்திலே மேம்பட்டவர்களைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானஞ் செய்க. அதனல் மாத்திரந்தான் புலன்களைத் தன் வசப்படுத்தத் தக்கது. ஆகவே இடைவிடாமற் சிவத்தியானஞ் செய். மனிதன் விடயங்களைக் கருதும் போதெல்லாம் பற்றுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தாற் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம், அம் மயக்கத்தால் தவறுதல் உண்டாகும். ஆதலால் உன்னைச் சிவத்தியானத்தால் காத்துக்கொள்.

நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினல் இயல் பழிந்து தரும வழியினின்று தவறுகிறேம். தவறுதல் நீங்கித் திடமுண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும். இந்த உலகத்தில் மிகுந்த செல்வமிருப்பினும், வானேரை ஏவல் கொள்ளக் கூடிய வல்லமையிருப்பினும் நாங்கள் புலன்களை அடக்கி யாளுதல் முடியாது. ஆதலால் திருவருளை முன்னிட்டு மனத்தைப் புலன்வழிச் செல்லாமல் அடக்கியாள். இதுதான் தவமென்று பெரியோர் சொல்வர், அதைவிடுத்து இடம்பமான வேள்வி முதலியவை செய்வதால் திடமுண்டாக மாட்டாது.

## நீ யார்

சொல்வதை மிகவும் கவனமாகக் கேள். நீ யார்? உடம்பா? மனமா? அன்றிக் கண், காது, வாய், மூக்கு முதலிய அவயவங்களா? இல்லை. ஏன்? எனது உடம்பு எனது கையென்று சொல்லுகிறதானல் நான் உடம்பை விட வேறு பொருளல்லவா? ஆம்; பின்னை நான் எப்படிப் பட்டவன்? அழிவில்லாதவன் ஆகையால் எனக்குப் பயம் முதலியன வரலாமா? இல்லை; ஆனல், சரீர மன தர்மத் தையெட்டிப் பாவத்திற்குப் பயப்பட வேண்டும். புண் ணியத்தைச் செய்ய வேண்டும். புத்திமான்கள் இப்படி நினைந்தும், செய்தும் பேரின்பத்துக்கு இம்மையிலும், மறுமையிலும் பாத்திரமுள்ளோராகின்றனர். நிலம், காற்று, தண்ணீர், நெருப்பு, வானம் இவைகளாலாக்கப் பட்ட வீட்டில் பகவான் வசிக்கிருர். ஆனபடியால், வீட்டைச் சுத்தமாயும், மனத்தைச் சுத்தமாயும் வைத்து அமைதியாய் நட.

---

## சிவோகம் பாவனை

### I

தெய்வத்தை நம்பு, முழுமனத்தோடு நம்பு; உல கில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனி யதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக் கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையி லும், இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறை வதாக. நானில்லை, கடவுளே இருக்கிருரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக் கொள். எவன் எதை நினைக்கிருனே அவன் அதுவா கிருன். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப் பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனுகவே காணப்படும்.

## II

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிருர். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிருனே அவன் அப்படி ஆகிருன். ஆகையால் 'நான் அவனே' என்று தியானஞ் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையேயாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை. அவனே அனைத்தும். அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிருன்.

அவனுக்குப் பிறப்பிறப்பில்லை. ஆதியந்தமில்லை. ஒரு மாறுதலுமில்லை. முழுதுமுண்மை.

ஓம் சாந்தி

---

### சன்மார்க்கம்

குரங்குபோல் மனங்கூத்தாடுகின்றதே.

இதன் கூத்தை எப்படி யடக்குவதென்று தெரியவில்லையே. நன்று சொன்னுய். இதற்கு நல்ல மருந்துன்னிடமுண்டு. நீ அதை மறந்து போனுய். சொல்லுகிறேன் கேள்.

சிவத்தியானமென்னும் மருந்தைத் தினந்தோறும் சாப்பிட்டு வா. மனக்குரங்கின் பிணி மாறும்.

அதைச் சாப்பிடும்போது அனுபானத்தைக் கூட்டிச் சாப்பிடு. அதுவு முன்னிட முண்டு.

அது என்னவென்ருல்; நாவடக்கம், இச்சையடக்கமென்னுஞ் சரக்கோடு சேர்த்துச் சாப்பிடு.

இதுவும் போதாது.

பத்திய பாகத்திலேதான் முற்றுந் தங்கியிருக்கிறது. அதுவு முன்னிட முண்டு.

அது என்னவென்றால்; மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம்.

ஆன்ம லாபத்தின் பொருட்டிதைச் செய்.

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழு மனத்தோடு விரும்புவானானால் சிவத்தியானத்தைத் தினந் தோறும் செய்து வரக் கடவன்.

படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண்கூடாகக் காணுவான்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங் கள் அவனிடத் துதிக்கும்.

அவன் மன மெந்தநேரமும் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும். இகழ் புகழின்றடினாலும் இழிவடையான். அந்தராத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகம் தன் சுக மென்ற எண்ணம் பெருகும்.

கைவிளக்கை யொருவன் கொண்டு செல்வானானால் இராக்காலத்தில் அவன் மனங் கலங்குவானா? கலங்கான். அப்படியே சிவத்தியானத்தைச் செய்து வருவானானால் மாயவிருள் அவனை யடையுமா? அடையாது.

போதனையிலும் சாதனை சிறந்தது.
ஒரு பொல்லாப்பு மில்லை.

ஆன்ம லாபமே பொருளெனக்கண்ட அறிஞர், அநித்தியமான இந்த உலகஇன்ப துன்பத்தில் மயங்காது தாமரையிலையில் நீர்போற் சகத்துடன் கூடிவாழ்வார். ஆன்மலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலகத் துன்ப இன்பத்தினாற் கலங்கித் தியங்கித் திரிவார்கள். ஆன்மலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு, நன்மை தீமையை வென்று, நான் என தென்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறப்பிறப்பற்றுப் பேரின்பத்துடன் வாழ்வார்.

அஃதறியா அறிவிலிகளே துன்பக் கடலிலே வீழ்ந்து எரிவாய் நிரயத்துக் காளாவார்.

வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்று மறியாது கிடப்பது போல் பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினுல் கிண்டி, ஆங்குவரு மாநந் தத்தேனை யுண்டு ஒன்று இரண்டு, நன்று தீதென்றறி யாமற் தேக்கிக் கிடக்கிருன்.

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தையிட்டு அதிலுண்டாகுங் களையைக் களைந்து விளையுந் தானியத்தை யொன்று சேர்க்கிருன்.

அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தி யென்னும் வித்தை வித்திக் காமக்குரோத லோப மோக மதமாச்சரியமென்னுங் களையைக் களைந்து சிவபோக மென்னுந் தானியத்தைச் சேர்த்து வைத்துப் புசிக் கிருன்

பூலோகமாகிய நந்தன வனத்திலே சீவர்களாகிய மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. சிவன் அதைக்கண்டு மகிழ்கிருன்.

பொற்கொல்லன் பொன்னை யெடுத்துப் பல பூண் களைப் படைக்கிருன்.

சிவனுகிய பெரிய பொற்கொல்லன் ஆன்மாவாகிய பொன்னை யெடுத்துச் சீவர்களாகிய பல பணிகளையு மாக்குகிருன்.

வைத்தியன் பல மூலிகளையுமெடுத்து ஒன்ருக்கி நோய்க்கு மருந்து கொடுத்து நோயை மாற்றுகிருன்.

பெரிய ஞான வைத்தியனும் தனு கரண புவன போகங்களை ஆன்மாவுக்குக் கொடுத்து அதன் நோயை மாற்றி இன்ப வீட்டில் வைக்கிருன்.

தாய் தனது குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து மகிழ்விக்கிருள்.

சிவபெருமானுந் தன் குழந்தைகளாகிய எங்களுக்குப் பலவிதமான இன்பங்களையுந் தந்து மகிழ்விக்கின்றான்.

பொறி வழியே போந்து மனம் அலைய அறிஞர் இடங்கொடார். ஏனெனில் ஆத்மாவே தானென அறிந்தவர்கள் ஆசை நோய்க்கு இடங் கொடுப்பாரா? அன்று.

அவர்தம் பெருமையை வேத சிவாகமங்களும் புகழ்கின்றன.

இவர்களைக் கண்டால் கல்லுங் கரையும்.

அனைத்தினும் வெற்றி யுண்டு.

## நானே நீ

என்னுடைய இராச்சியத்தில் இராப்பகலில்லை. நன்மை தீமையில்லை. நீ நானில்லை. இன்றைக்கு நாளைக்கு இல்லை. பெரிது சிறிது இல்லை. நீயுமிந்த இன்பத்தை அனுபவிக்க வேண்டுமாகில், அங்கு முழு மனத்தோடு வெளியேறக் கடவை; புகையிரதம் வேண்டியதில்லை, மாட்டுவண்டி தேவையில்லை; பின் என்ன வேண்டுமாகில் வைராக்கிய மென்னும் புதுக்காத வண்டிலும், சாந்தம் என்னும் இரண்டு வெள்ளை எருதுகளும், மனப்பாக்கிய மென்னுஞ் சமையாத சாதமும், யாசகமென்னும் அங்கவஸ்திரமும், ஞானமென்னும் மூக்குக் கண்ணாடியும் எடுத்துக் கொண்டு பின்முன் நாடாமல் வரக்கடவை. அப்பொழுது நீ காணவிருக்கும் காட்சிகளை என்றாற் சொல்ல முடியாது. கடவுளே சாட்சி.

---

## சிவத்தியானம்

ஓ மனிதனே! நீ உண்மைப் பொருள்.

கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைக்க முடியாது.

நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன்.

உறுதியுடனே சிங்கம் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி.

எந்த விதத்திலும் தளர்வடையாதே.

ஒரு நூதனமு மிங்கில்லை. முழுதுமுண்மை.

ஒரு பொல்லாப்புமில்லை.

ஓ மனிதனே! வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சிசெய்யக் கருதாதே.

சாட்சியாயிரு. மாட்சி உன் பிறப்புரிமை.

அது என்ன உபாயத்தாலு மடையப்படுவதொன் றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படி வித்தை. அறிவு, அறியாமை உன்னிடமில்லை.

நீ பரமாத்மா.

ஓம் தத் சத் ஓம்.

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்வாய். துயருறத் தகாத காரியங்களில் துயருருதே. துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றும் தாக்கமாட்டாது. எழுந்திரு; விழித் துக்கொள். சிவத்தியான மென்னுந் திறவு கோலால் மோக்ஷ வீட்டின் கதவைத் திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஓ நண்பனே! உன்னை யார்தான் பாவியென்று சொல்ல வல்லான். ஏன்?

நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு. உன் முழு மனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக் கொடு.

சிவத்தியானத்தை அசட்டை பண்ணுதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும். சோம்பலுக்குஞ் சோம் பலின்மைக்கும் நீ கட்டுப் படாதே.

அதிகப் பேச்சில் என்ன பயன். பண்படுத்தப் பட்ட தரையிலன்றோ நல்ல பயன் வரும். அஞ்சாதே.

நாங்கள் சிவனடியார். சிவபெருமான் என்றுள்ள வரோ அன்று நாமுமுள்ளோம்.

வெப்பம், தட்பம், இன்பம், துன்பம், இளமை, முதுமை இயற்கையின் குணங்கள்.

இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படு வான். இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்று வதுமில்லை. மறைவதுமில்லை.

உண்மை இன்மை யாகாது. இன்மை உண்மை யாகாது.

எல்லாஞ் சிவன் செயலென்ற எங்களுக்குக் குறைவு முண்டோ? நிறைவு முண்டோ? நாம் சிவபெருமா னென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிற முள்ள மணி களை யொப்பவர். நூலறுவது மில்லை. நாங்கள் சிதறிப் போவதுமில்லை. பலபடக் கூறுவதால் பயனில்லை.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஓ சினேகிதா! நீ சிவனடியானென்று முழு மனத் தோடும் நினை. எல்லா வெற்றியு முன்னிட முண்டு. அதற்கு மேல் வேறொன்று மில்லை. யாவுமுன் காலடியில்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

---

## குரு வாசகம்

ஆத்துமா நித்தியமானது. பிரிவில்லாதது. பூரண மானது. சரீரமோ அழியுந் தன்மையுள்ளது. பிரிவுள் ளது. இப்படி யிருக்கையில் நாங்கள் இவ்விரண்டை யுஞ் சரியென்று சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சொன்னால் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?

ஆத்துமா எல்லாத்துக்கு மாதியாயுள்ளது. யாவை யும் ஆளுகின்றது.

சரீரமோ தொடக்கமுடையது. ஆளப்படுந் தன்மை யுடையது.

இப்படி யிருக்கையில் நாங்களிவ் விரண்டையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அப்படி யொப்பிட்டால் இதிலும் வேறு பழி கிடையாது.

இயற்கையிலே ஆத்துமா அறிவுடையது. தூய்மையானது. சரீரமோ அறியாமை யுடையது. தூய்மை யற்றது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ்ஞானம் பிறிதுண்டோ?

ஆத்துமா பிரகாசமுடையது. அதாவது சுயம் பிரகாசமுடையது. சரீரமோ இயற்கையிலே இருள் மயமானது. இவ்விரண்டையு மொப்பிடலாமா?

யாரொருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கிறானோ ஐயோ, அவனிலுங் கீழ்மகன் யார்?

யார் ஒருவன் தன்னுடைய சரீரமென்று சொல்லுகிறானோ அவன் மட்பிண்டத்தைத் தன்னுடையது என்று சொன்னது போலிருக்கும்.

யார் ஒருவன் தன்னைப் பூரணனென்றும், நித்தியன் என்றும் இயற்கை அறிவுடையவனென்றும் நினைக்கிறானோ அவன் உண்மை யறிவாளி, அவனுக்கு இணையாக ஒரு தெய்வமு மில்லை,

யார் ஒருவன் தன்னை ஒர் அழுக்கும் பற்ற மாட்டாதென்றும், மாறுபாடில்லாதவனென்றும், தூய்மையிலுந் தூய்மை யென்றும் நினைக்கிறானோ அவனை அறிவாளிகள் ஞானி யென்று சொல்லுவார்கள்.

வேதம் ஆகமம் யாவும் இந்த உலகம் முழுவதும் தெய்வமே நிறைந்திருக்கிறதென்றும் அதைவிட வேறு யாதுமில்லை யென்றும் முறையிட நாங்கள் எப்படி உலக மிருக்கிறது சரீர மிருக்கிறதென்று நினைக்கலாகும். அப்படி உலகம், சரீரம் வேறுயிருக்கிறதென்றால் இதைவிடப் பழி பிறிதுண்டோ? ஆன்றோரும் 'நின்றவைார் பிறரன்றி நீயே ஆனாய்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னோரன்ன பல காரணங்களாலும் கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை, யாவும் அவன் செயல்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே

## எல்லாஞ் சிவம்

பார் எல்லாஞ் சிவமயமாய் இருக்கின்றன, அப்போது நீ யார்? நான் யார்? ஐயா யார்? மற்றும் எல்லாம் என்ன? சிவமல்லவா? இன்னுஞ்சந்தேகமா? பயமா? பார். நான் உன்னுடனும் நீ என்னுடனும், எல்லாம் ஒன்ருகவும், ஒன்று எல்லாமாகவும் ஒருவிதமான மாறுதலும் அடையாமல் இருந்தபடியே யிருக்கின்றது, எழுந்திரு, வரவரப் படி, காலமில்லை, சுகம்! சுகம்! சுகம்!

* * *

எங்குஞ் சிவமென்பர் பெரியோர், வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்துப் பார்த்தா லுலகத்தவர் போலிருப்பர் பற்றற்றவரே!

* * *

ஆர் நிகருனக்குப் பார்சிவம் எங்கும்? ஆர்பகை? ஆர் நட்பு? செய்வது பூசை, நினைப்பது மந்திரம்.
படிப்பது தேவாரம்,
உய்ந்தாய் உய்ந்தாய்,
பலபடச் சொல்வதில் பலன் ஒன்றுமில்லை.

## சிவபக்தி

சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானுக்கும். மற்றையவனைத்தும் பிரயோசன மற்றவை. ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே, வெற்றியுன் சொந்தம். எத்தனை முறை தவறினுலும் தைரியத்தைக் கைவிடாதே. தவறுதல் சடசம்பந்தமானது. நீயோ சித்துப்பொருள் (அதாவது அறிவுப் பொருள்). நீயொரு நாளும் அழியமாட்டாய். எழுந்திரு! விழித்துக் கொள்! காரியங் கைகூடுமட்டும்

வழியிலே தங்கிவிடாதே! உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்குச் சகல சத்தியுங் கட்டுப்படுவதைக் காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. நீ எங்கே போகிருயோ அங்கே உன்னுடன் பகவான் வருவார்.

வெளிமாதிரி யொன்றுஞ் செய்யாதே. உனக்குள் நீ பெலத்துக் கொள். சமயமென்பது ஒரு மாதிரியு மற்ற தனித்த நிலை. உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கு ஒப்படை. அதன்பின் உன்னைப் பற்றிய காரியங்களைக் கைவிட்டுவிடு. அனைத்தும் அவனே பார்.

---

## உத்தம இரகசியம்

நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள்; எங்களுக்குள் ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துள் வைக்கப் பட்டவர்களாகவும் இருக்கின்ரேம். வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சம்பவத்தின் சிறப்புக்களாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர். ஒழுக்கத்திஞல் வசீகரப்படுத்தப் பட்டோர்க்கன்றி மற்றையோர்க்கு இவ்வுண்மை புலப் படாது. அது பற்றியே தன்னுயிர்போல் மன்னுயிர் யாவையும் நேசித்தல் வேண்டுமென்று மகத்துக்களால் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் யாவும் ஒழுக்கத்திலேயே தங்கியிருக்கின்றன. இவ்வொழுக்க வழியில் நின்று எல்லாம் நாம் என்று பாவனைசெய்து வரவர அற்புதமான அநுபவங்கள் மூலமாக நாங்கள் சடப்பொருள் அல்ல; சித்துப்பொருளென்று தெளியலாகும்.

---

## சுகவாழ்வு

1. கடவுளை மனம் வாக்குக் காயத்தாலே காலை உச்சி மாலை என்னும் மூன்று காலத்திலும் வழிபடுதல் வேண்டும்.

2. சரீரத்தையும் மனத்தையும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

3. சரீரத்திலாவது மனத்திலாவது ஏதும் குழப்படி ஆரம்பிக்கும்போது அந்தக்ஷணமே சாப்பாட்டை நிறுத்தி, ஆலய வழிபாடு, அடியார் வழிபாடு, அல்லது இயன்ற தானதருமங்கள் செய்ய வேண்டும்.

4. வரவுக் கேற்ற செலவு செய்யவேண்டும்.

5. தனிமையாக இருந்து கொண்டு அல்லது நடந்து கொண்டு தன் வாழ்நாளை நடாத்தும் வகையைச் சிந்திக்க வேண்டும்.

6. மிஞ்சிய போகத்திலாவது, போசனத்திலாவது வைத்திருக்கு மாசையை அடியோடு தவிர்க்க வேண்டும்.

7. இறைச்சி மீன் குடி முதலியவைகளை விடவேண்டும்.

8. எப்பொழுதும் நல்ல சுறுசுறுப்புள்ளவனுக இருக்க வேண்டும்.

9. தான் மிகவும் பரிசுத்தன் என்றும் தனக்கு ஒரு குறைவில்லை யென்றும் அமைதியாகச் சிந்தித்தல் வேண்டும்.

10. மேலே சொல்லிய வண்ணம் இவ்வாறு ஒருவன் சாதித்துப் போதித்து வருவானுயின், யோகமும் ஞானமும் சர்வசித்தியும் ஈற்றில் முத்தியும் லபிக்கும்.

---

## இன்பவிறையே!

ஒரு பிதா தனது குழந்தையினது மழலை மொழியைக்கேட்டு மகிழ்வானன்றிச் சிறிது மிகழமாட்டான்.

அவ்வண்ணமே, தேவரீர் அடியேனுடைய விண்ணப்பத்தைக் கேட்டருள்வீராக. இவ்வுலகத்திலே எத்தனையோ சாதிகளுண்டு. அவைகளின் பழக்கவழக்கங்கள் ஒன்றெடொன்றெவ்வாது முரண்படுகின்றன. ஒவ்வொரு சாதியும் தத்தம் பழக்க வழக்கங்களை மேம்

பாடுடைத்த தெனக் கூக்குரலிடுகின்றது. சமயங்களு மப்படியே. இவைகள் யாவும் உலகத்தின் சிறப்புக்களே யன்றி வேறல்ல. இந்த வித்தியாசமான போராட்டங் களெல்லாம் முன்னுமுள்ளன. நூதனமான காரியங்க ளல்ல. இவைதாம் இந்தப் பிரகிருதியின் தோற்றங்கள். இவை வேறு தான் வேறு என்றறிந்த அறிவாளி இவை களுடன் கூடியும் கூடாது மிருப்பன். எத்தனையோ முறைகளில் பெரிய பெரிய அவதாரங்கள் வந்து எவ் வளவோ வேலைகளைச் செய்தும் மீட்டும் இந்த உலகம் அப்படியே யிருக்கின்றது. இது ஒரு பெரிய இரகசியம்.

தேவரீர்! இவைகள் எல்லாம் நன்கறிவீர். நான் ஒன்றுமறியேன். என்னை மன்னித்துக் கொள்ளும்.

## ஓம் தத் சத்

அகமுக மாகு. அப்போதே ஆனந்தம் உண்டாம். எதனுல் கண் காணுகிறது? எதனுல் காது கேட்கின்றது? எதனுல் மூக்கு முகருகின்றது? எதனுல் வாய் பேசு கின்றது. அதுதான் ஆத்துமா அல்லது கடவுள். எவ் வளவு சுலபமான வழி? நினைத்துப் பார். அனைத்துமுன் கைவசம். ஒரு கணம் நீ ஊன்றி யோசிப்பாயானுல் நீ அதுவென உனக்கு நன்கு புலனுகும். உன்னுள்ளே தெய்வீகத்தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்துக்கேக சக்க ராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப் புப் பிறப்பாகிய சமுத்திரத்திற் கிடந்து திக்குமுக்குப் படுவாய்.

எழுந்திரு, விழித்துக்கொள், உன்னை இனி ஒன்றும் வெற்றி எடுக்க முடியாது. விளக்கு எரிய வேண்டுமா யின் திரியும் எண்ணெயும் வேண்டும். பிரகாச மடைய வேண்டினுல் ஓயாமல் ஓம் தத் சத் என உணர்ச்சி யோடு (அதாவது உயிரை எழுப்பி) பிரார்த்தனை செய். சீக்கிரம் புத்தகத்தை முடி.

செட்டியார் அச்சகம்,
432, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.